புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கியத்தில் மகளிர் மேம்பாட்டுச் சிந்தனைகள்

முனைவர்.சு.சுதா
எம்.ஏ,எம்.பில்,பீ.எச்.டி
நாசரெத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆவடி, சென்னை-70

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்தில் பெண்களின் நிலைப்பாடு, வாழ்க்கை முறை கடமைகள் குறித்த பதிவுகள் சுருக்கமாக பேசப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள் கல்வி, அரசியல், சமுதாயப்பணி, வீரம் முதயவற்றில் ஆண்களுக்கு நிகராக விளங்கினர் என்பது சங்கப் புலவர்களின் பாடல்வழி அறியலாகிறது. பல்வேறு தொழில் செய்து வாழ்ந்த சமுதாயத்தைச் சார்ந்த பெண்பாற்புலவர்கள் புலமைப் பெற்றவர்களாக மட்டுமின்றிச் சமூக உணர்வுடையவர்களாகவும் சமுதாயப் புதுமை நோக்குடையவர்களாகவும் நாட்டை நல்ல முறையில் முன்னேற்ற வேண்டுமென்ற சிந்தனையுடையவர்களாகவும், அரசனுக்கு அறிவுரைகூறும் அறிவுரையாளராகவும் மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்தனர். நாற்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்களின் பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன. சங்கப் புலவர்கள் தங்களின் கணவர்களைத் தாமாகவே தேர்ந்தெடுக்கும் உரிமை, கணவன் ஈட்டிவந்த பொருள்களைப் பாதுகாக்கும் உரிமை எனப் பல உரிமைகளைப் பெற்றிருந்தனர். மேம்பாடு என்றால் என்ன என்றும் சங்ககாலப் பெண்புலவர்கள் பலவித உத்திகளைக் கையாண்டுள்ள விதத்தினையும், கல்வியின் சிறப்புகளை அவர்கள் அறிந்திருந்தனர் என்பதையும், சான்றாண்மைக் கல்வி, பாற்கல்வி போன்ற கல்வியின் பல விதங்கள் கற்றிருந்தனர் என்றும் நாம் அறிய முடிகிறது. இக்கருத்துக்களை மையப்பொருளாக வைத்து ஆய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை:

தமிழ் மொழியின் தொன்மையையும், தனிச்சிறப்பையும் உலகமெலாம் உணரச்செய்தது சங்க இலக்கியம் தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

சங்க இலக்கியம் சாகாவரம் பெற்ற தங்க இலக்கியம் மட்டுமன்று ஒரு சந்தன இலக்கியம்.அரைக்க அரைக்க மணம் கமழும் சந்தனம் போலக் கற்க கற்க இனிமை பயக்கும் கவிதை. சங்க இலக்கியத்தின் வாயிலாக அக்கால சமுதாயத்தின் கலாச்சார, பண்பாட்டுக் கூறுகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றை அறிய முடிகிறது. மகளிர் மேம்பாட்டுச் சிந்தனைகள் என்று கூறிய இவ்வியலில் சங்ககால மகளிர் மேம்பாடு குறித்த சிந்தனைகளைக் கூறுவதே

## மேம்பாடு- விளக்கம்

மேம்பாடு என்ற சொல்லைப் பகுத்துப் பார்க்கும்போது(மேன்மை படுதல்) என்ற இலக்கணத்திகு ஆட்படுகிறது. மேலும் இச்சொல்லிற்கு வளர்ச்சி அடைதல், உயர்வான நிலையை அடைதல், நல்ல தரநிலையை அடைதல் மற்றும் அறிவார்ந்த நிலை நோக்கிப் பயனப்படுதலே "மேம்பாடு" என்ற சொல்லுக்குரிய பொருள் எனலாம்.

## சங்கப் பெண்பாற் புலவர்கள்

சங்க நூல்களில் பெண்பாற் புலவர்கள் குறித்த கருத்து வேறுபாடுகள் ஆய்வாளர்களிடம் காணப்படுகின்றது. பெண் கவிஞர்களின் எண்ணிக்கை 38 என உ.வே.சா. வும், 30 என வையாபுரி

*பிள்ளையும். 34 என ஔவை சு.துரைசாமிப்பிள்ளையும், 27 என கா. கோவிந்தனும். 47 என ஔவை நடராசனும், 45 என் தாயம்மாள் அரவாணனும் குறிப்பிடுகின்றனர்.*

*ஔவையார்*

*தன்னை வருத்தும் காதல் நோயை அறியாமல் உறங்கும் ஊர்மக்களை என் செய்வது என்பதை பாடும் பாடலில் ஔவையாரின் உரிமைக் குரல் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது. ஔவையாரைத் தவிர பெரும்பாலான பெண்பாற் புலவர்கள் அகப்பாடல்களையே அதிகம் பாடியுள்ளனர்.*

*" முட்டு வேங்கொல் தாக்கு வேங்கொல்"1*

*என்று*

*அதியமான் பரிசில் தாழ்த்தியபோது 'எத்திசை செல்லினும் அத்திசைசோறே' எனத் தன்மானத்தை வெளிப்படுத்தியதும், அதியமானின் வீரத்தையும் அவரோடு கொண்ட நட்பைப் பாடலாக்கியதும் ஔவையாரின் சிறப்பை உணர்த்துகிறது.*

*ஆண் படைப்பாளிகள் பெண்களுக்கு ஒழுக்கத்தையும் நன்னடத்தையையும் அறிவுறுத்தியிருப்பதைப் போலவே ஔவையார் ஆண்களுக்கு,*

*"எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே"2*

*என அறிவுரை வழங்கியிருப்பது பெண்மையின் இலக்கிய ஆளுமைக்குச் சிறந்த சான்றாகும்.*

*தேச நலனுக்காக இலக்கியம் படைக்கும் பெண்மையின் பரந்த மனமும், ஆடவரின் தவற்றைச் சுட்டிக் காட்டி நல்வழிப் படுத்தும் சீர்திருத்த பக்குவமும், பெண்மையின் துணிச்சலும் இதில் வெளிப்பட்டுள்ளது.*

*வெள்ளிவீதியார்*

*"கன்றும் உண்ணாது கலத்தினும்படாது*
*நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு"*

*என்ற பாடலில் என்னுடைய பேரலகு எனக்கும் உதவாது, பிறருக்கும் உதவாது, பசலையால் விரும்பி உண்ணப்படுகிறது என்று பிரிவுணர்த்துவதும்.*

*மற்றொரு பாடலில் வெள்ளம் கரையை உடைத்துக்கொண்டு ஓடுவதுபோலக் காமம் பெருகித் தனக்குக் காவலாக இருந்த நாணத்தை நீக்கியதோடு தன்னுடைய பெண்மை ஒழுக்கத்தையும் சாய்த்தது எனப் பாட்டுடைத் தலைவி கூற்றாக வைத்துப் பெண்ணின் இயல்பை வெள்ளிவீதியார் கூறுவதாக அமைந்துள்ளது.*

*கருத்தாடல் உத்திகள்*

*கருத்தாடல் என்பது மனிதன் தன் கருத்தினை உண்ர்ச்சிப்பூர்வமாகவோ, மொழியின் மூலமாகவோ அல்லது பிறவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்கும் செயலினைக் குறிக்கும் சொல்லாகும்.*

*கருத்தாடலும் நடையும்*

*"பேச்சு, எழுத்து, செய்யுள், உரைநடை, சொற்பொழிவு, உரையாடல் ஆகிய பல்வேறு வடிவங்களில் வெளியிடப்படும் படைப்புகளே கருத்தாடல் எனப்படும் என்கிறார் சண்முகம்"3*

*எடுத்துரைத்தல் உத்தி*

*தான் பொருள்தேடித் திரும்ப வரும் வரையில் தலைவி ஆற்றியிருப்பாளா? என்று கேட்ட தலைவனுக்குத் தோழி தலைவியின் நிலையை எடுத்துரைக்கும் விதமாக அமைந்த மதுரை நல்வெள்ளியார் பாடல்,*

*"கோடுஈர் இலங்குவளை நெகிழ, நாளும்*
*பாடுஇல கலிந்த பனிஆ னாவே*
*துன்அரு நெடுவரைத் ததும்பிய அருவி*
*மருங்கில் கொண்ட பலவின்*
*பெருங்கல நாட! நீ நயந்தோள் கண்ணே!"4 என்பதாகும்*

இதில் தலைவி, தலைவனின் பிரிவைத் தாங்கி இருப்பாளா? மாட்டாளா? என்பதனை அறிய விரும்பும் தலைவன், தலைவியின் உள்ளக்கருத்தினை உணரவெண்ணாதவனாய்த் தோழியிடம் தலைவியின் உள்ளக்குறிப்பினை அறிந்து சொல்லுமாறு பணிகிறான். இங்கு தோழி தலைவியின் உடல் மாற்றத்தை கண்டு இன்னும் சிறிதுகாலம் தலைவியுடன் இருந்துவிட்டு செல்லுமாறு தலைவனிடம் கூறுகிறாள்.

*வினவுதல் உத்தி*

கருத்தாடலின் ஒரு கூறாக வினவுதல் உத்தி அமைகின்றது. அது வினா கேட்பது போல் அமைந்திருக்கின்றது. களவுப் பொழுதில் தலைவி மகிழ்வுடன் வினவுவதை ஔவையாரின்

"நெடுவரை மருங்கில் பாம்புட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அலைஇக்
காலொடு வந்த கமழ்சூல் மாமழை
ஆர்அளி இலையொ? நீயே, பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணைஇலர், அளியர் பெண்டிர்....?5 என்ற பாடல் பேசுகிறது.

*கல்வி*

கல்வியைக் 'கண்' என்றும் கற்பித்தலைக் கண்திறந்து விடுதல் என்றும் கூறுவர்.

சங்ககாலத்தில் கல்வியில் சிறப்பெய்தி விளங்கும் ஒருவனையே தாய் விரும்பியுள்ளார். அதுபோல ஒருகுடியில் பிறந்த பலராயினும் அரசன் கல்வியில் சிறந்தோனைத் தேர்ந்த்தெடுத்து அவன் அறிவுரைப்படியே ஒழுகுவான் இதனைப்பற்றி புறநானூற்றுப் பாடல் ஒன்று

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்"

என்ற பாடல் வழி அறியலாம்.

கல்வியறிவு பெற்ற ஒருவனது நன்னடையில் சமூகம் பயனடைய வேண்டும். சங்ககாலச் சமுதாயம் வேந்துவழி ஒழுகிய சமுதாயம் எனினும் அறிவார்ந்த பெரியோரை அமைச்சராகவும், நண்பராகவும் இருந்ததற்கு ஔவையார் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்திருக்கிறார்.

*பாற்கல்வி*

அன்னை மகளுக்கு அறிவுறுத்திய பாற் கல்வியின் பாங்கு சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. புன்னைக்காய் மூலம் ஒழுக்க நெறிக் கல்வி மறைமுகமாக ஊட்டப்பட்டுள்ளது.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய"6

இப்பாடலை புன்னைக்காய் பொதிந்து வளர்ந்த கதையெனக் கருதுவதை விட ஓர் அன்னை தன் மகளுக்கு அறிவுறுத்திய பாற்கல்வியாகும். ஒழுக்க நெறிக் கல்வியே சமூகத்தைக் காக்கும் என்ற நம்பிக்கையுடன் சங்ககால மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதைப் பாற்கல்வி காட்டுகிறது.

*சான்றாண்மைக் கல்வி*

நாகரிகத்தையும், பண்பாட்டையும், உலக அமைதியையும் காக்கும் சான்றாண்மைக் கல்வியினை, சங்க காலப் புலவர்கள் வேந்தர்க்குச் சமயம் வாய்க்கும் இடத்தில்லெலாம் கூறினர்.

"அன்னாய்! இளமா ணாக்கன்:
தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ"7

என்ற படுமரத்து மோசிகீரனாரின் இப்பாடலில் தலைவி தன்னை வருத்திக் கொண்டு கல்வி கற்கும் மாணவனின் பெருமையைக் கூறுகின்றாள்.

முடிவுரை

சங்ககாலச் சமுதாயத்தில் கல்வியின் பெருமை உணரப்பட்டிருந்ததைப் புறநானூற்றின்(183)8 பாடல் வழி அறிய முடிகிறது. கிடைக்கின்ற தரவுகள் புலமைவாய்ந்த பெண்புலவர்களை அடையாளம் காட்டுகின்றது.

மேற்கோள்கள்


1. ந. முருகேச பாண்டியன்- சங்கப் பெண் கவிஞர்களின் கதைகள் – ப-5
2. மேலது- ப-28
3. செ. சண்முகம் – கருத்தாடல் கருவும் உருவும்- ப- 271
4. குறுந்தொகை -பா-36
5. மேலது- பா-158
6. நற்றிணை – பா-172
7. குறுந்தொகை பா- 33
8. புறநானூறு பா-120


********* ********* ********** ********* ********* ********** ********** **********